ARCH Disability Law Centre

425 Bloor Street East, Suite 110
Toronto, Ontario M4W 3R5
www.archdisabilitylaw.ca

(416) 482-8255 (Main) 1 (866) 482-ARCH (2724) (Toll Free)
(416) 482-1254 (TTY) 1 (866) 482-ARCT (2728) (Toll Free)
(416) 482-2981 (FAX) 1 (866) 881-ARCF (2723) (Toll Free)


2007/12

# எவ்வாறு உளநல சட்டங்கள் உங்களைப் பாதிக்கின்றன என்பதை விளங்கிக் கொள்ளல்: மொழிவிளக்குனா் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல திறன் குறைவு தொடர்பான சட்ட மையம

**எவ்வாறு உளநல சட்டங்கள் உங்களைப் பாதிக்கின்றன என்பதை விளங்கிக் கொள்ளல்: மொழிவிளக்குனா் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்**

நீங்கள் உளநல சேவைகளையும் ஆதரவினையும் பயன்படுத்துபவராகவோ அல்லது பயன்படுத்தியிருப்பவராகவோ இருப்பதுடன் நீங்கள் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சினை பேசாதவராகவும் இருப்பின் இந்த தகவல் தாள் உங்களுக்கு உதவி செய்வதாக அமையும். அத்துடன்,

- உங்களுக்கு உரிமைகள் பற்றிய ஆலோசனை தேவை, ஏனெனில் உதாரணமாக, நீங்கள் வைத்தியசாலையை விட்டு வெளியேறக் கூடாது என்றோ அல்லது நீங்கள் மருந்து எடுக்க வேண்டுமென்றோ அல்லது ஏனைய சிகிச்சைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றோ கூறப்பட்டிருந்தால்;
- நீங்கள் அங்கீகரிப்பு மற்றும் ஆற்றல் சபையில் இருந்தால்;
- ஓா் உள சீா்குலைவின் காரணமாக; ஓா் குற்றத்திற்கு பொருத்தமற்றவராகவோ அல்லது குற்றவியல் ரீதியில் பொறுப்பாளியற்றவா் எனக் காணப்படுவதுடன் நீங்கள் ஒன்ராறியோ மீள்பாா்வை சபையிலும் இருந்தால்,

இது உங்களுக்கு பயனுள்ளதாகும்.

**பிரெஞ்சு அல்லது ஆங்கிலம் உங்கள் முதல்மொழி அல்லாவிடின்: உளநல சட்டங்கள் உங்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை விளங்கிக் கொள்வதற்கு ஒரு மொழி விளக்குனா் உங்களுக்கு கட்டாயமாக தேவைப்படும்.** இந்த தகவல் தாளானது, மொழி விளக்குனா் சேவைகளுக்கான உங்கள் உரிமைகளைப் பற்றியது.

இத் தகவல்களுள் சில; ரொறன்ரோவில் வாழும் மக்களுக்கு மட்டுமே பயனுடையதாகும்..

## உளநல ஆதரவுகளும் சேவைகளும்

உங்கள் உள நலம் சம்பந்தமான உதவி பெறுவதற்கு, உங்கள் மொழியை பேசி உங்கள் கலாச்சாரத்தை விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு சேவையை கண்டறிய நீங்கள் விரும்புவீா்கள். சில அமைப்புக்கள், வெவ்வேறு மொழிகளில் சேவைகளை வழங்குகின்றன. உங்கள் மொழியில் சேவைகளைப் பெறுவது பற்றி மேலதிகமாக அறிந்து கொள்ள நீங்கள் உங்கள் வீட்டு தொலைபேசியில் 211 ஐ அழுத்துவதன் மூலம் அல்லது ஒரு கட்டணம் செலுத்தும் தொலைபேசியில் 416-397-4636 ஐ அழுத்துவதன் மூலம் ரொறன்ரோவில் 211 ஐ அழைக்கலாம். அத்துடன் நீங்கள் <www.211toronto.ca> இற்குச் செல்லலாம். 211 இயக்குனா்கள்; ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிய, கன்ரனீஸ், பஞ்சாபி போன்ற அநேக மொழிகளைப் பேசுபவா்கள். உங்கள் மொழியைப் பேசக் கூடிய ஓா் இயக்குனரையும் நீங்கள் கோர முடியும்.

'ஒத்த ஆதரவு திட்டங்கள்' என அழைக்கப்படும். உளநல சேவைகளுடன் தனிப்பட்ட அனுபவம் உள்ள மக்களால் நடத்தப்படும் குழுக்களுக்கு செல்வது இன்னொரு தெரிவாகும். உங்கள் நிலமைகளை நீங்கள் விளங்கிக் கொள்ள அவா்கள் உங்களுக்கு உதவி செய்ய முடியும். ஒத்த ஆதரவு திட்டங்கள் பற்றி மேலதிகமாக அறிந்து கொள்ள 211, ரொறன்ரோவை அழையுங்கள்.

## மொழிவிளக்குனர் சேவைகளைப் பெறுதல்

உங்கள் உரிமைகளை விளங்கிக் கொள்வதைப் பற்றி நீங்கள் கவலையடைந்தால்; நீங்கள் ஓர் மொழிவிளக்குனரைத் தரும்படி கேட்க வேண்டும். ஓர் சிறியளவில் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு பேசவோ அல்லது எழுதவோ தெரிந்திருந்தாலும் கூட, உங்களுக்கு என்ன நடக்கிறது என்பதை நீங்கள் முழுமையாக தெரிந்திருப்பதற்கு ஓர் மொழிவிளக்குனரைக் கோருவது சிறந்தது.

குடும்ப அங்கத்தவர்களும் நண்பர்களும் அநேக முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கு எமக்கு உதவி செய்வதற்கு பொறுப்பானவர்களாக இருந்த போதும், உங்கள் நண்பர் அல்லது ஓர் குடும்ப அங்கத்தவருடன் உங்கள் உளநல விடயங்களைப் பற்றி பேசுவதற்கு நீங்கள் விரும்பாமல் இருக்கலாம். ஏனெனில்:

1. உளநல விடயங்களின் இரகசியத் தன்மை
2. எப்போதும் குடும்ப அங்கத்தவர்கள் அல்லது நண்பர்கள், சட்டம் சார்ந்த நடவடிக்கைகட்காக மொழி விளக்குனராக இருப்பதற்கான பயிற்சியைக் கொண்டிருப்பதில்லை
3. குடும்ப அங்கத்தவர்கள் அல்லது நண்பர்கள், உங்கள் தனிப்பட்ட அக்கறைகளை விட வேறுபட்ட அக்கறைகளைக் கொண்டிருக்கலாம்.

நீங்கள் உங்கள் தகவலை உங்களுக்குரியதாக மட்டுமே வைத்திருக்க விரும்பினால், நீங்கள் நேரடியாக ஓர் மொழி விளக்குனருடன் வேலை செய்ய முடியும். பயிற்றப்பட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டவரல்லாத மொழிவிளக்குனரை பயன்படுத்துவதற்கு நீங்கள் ஒருபோதும் உடன்படக் கூடாது. உளநல அனுபவங்கள் இருப்பதுடன் சட்டம் சார்ந்த பதங்களை விளங்கிக் கொண்டு மொழிபெயர்க்கக் கூடியவராக மொழிவிளக்குனர் இருத்தல் சிறந்தது.

எல்லாம் மொழிபெயர்க்கப்படும் என்பது பற்றி நீங்கள் நிச்சயமற்றிருந்தால், சொல்லப்படும் எல்லாவற்றையும் மொழிபெயர்க்குமாறு மொழிவிளக்குனரைக் கேளுங்கள்.

**'அறிவுறுத்தப்பட்ட அங்கீகாரத்தை' உங்களால் கொடுக்க முடிந்தால் மட்டுமே மருத்துவ சிகிச்சையை மறுக்கும் உரிமை உங்களுக்கு உண்டு. அறிவுறுத்தப்பட்ட அங்கீகாரம் என்பது, சிகிச்சை பற்றி உங்களுக்கு உங்கள் மருத்துவர் கூறுவதை விளங்கிக் கொள்ளுவதற்கு நீங்கள் பெற்றுக் கொண்ட தகவல் உதவுவதாக இருத்தலையே குறிக்கும்.** மருந்துகள் மற்றும் அவற்றின் பக்க விளைவுகள் பற்றி மருத்துவர் கூறுவது எல்லாவற்றையும் நீங்கள் விளங்கிக் கொள்வது மிகவும் முக்கியமாகும். உங்கள் மருத்துவர் பயன்படுத்தும் மொழியை நீங்கள் விளங்கிக் கொள்ள முடியாவிடின் ஓர் மொழிவிளக்குனரை ஒழுங்குபடுத்தும்படி நீங்கள் கேட்க வேண்டும்.

## உரிமைகள் ஆலோசனை

உளநல பிரச்சனைகள் கொண்ட மக்களுக்கு சிகிச்சையளிக்கும் ஒன்ராறியோவில் உள்ள வைத்தியசாலைகளில் உரிமைகள் பற்றிய ஆலோசனையை வழங்குவதற்காக உரிமைகள் ஆலோசகர்கள், சட்டத்தினால் பின்வரும் சந்தர்ப்பங்களில் கோரப்படுவார்கள்.

- நீங்கள் வைத்தியசாலையை விட்டு (சொந்த விருப்பத்துடன் செயற்பட முடியாத நோயாளி), வெளியேற முடியாது என்று உங்களுக்கு கூறப்பட்டால்
- உங்கள் சிகிச்சை, பணவிடயங்கள், அல்லது உங்கள் தனிப்பட்ட ஆரோக்கிய தகவல்கள் பற்றி உங்களால் தீர்மானங்கள் எடுக்க முடியாது என உங்களுக்கு கூறப்பட்டால
- நீங்கள் பன்னிரண்டு வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் இடைப்பட்ட (சொந்த விருப்பத்துடன் செயற்பட முடியாத நோயாளி) முறைசாராத நோயாளியாக நீங்கள் இருந்தால்
- உங்களை ஓர் 'சமூக சிகிச்சை ஒழுங்கினுள்' (Community Treatment Order – CTO) உங்கள் மருத்துவர் இட நினைத்துக் கொண்டிருந்தால்

உங்களுக்கு ஓர் மொழிவிளக்குனர் தேவைப்பட்டால், நீங்கள் பேசும் மொழியின் மொழிவிளக்குனரை தரும்படி உரிமைகள் ஆலோசகரிடத்தில் கேட்பதை உறுதிப்படுத்துங்கள். உரிமை ஆலோசகர்கள், பயிற்றப்பட்ட சான்றிதழ் பெற்ற ஓர் நிபுணத்துவ மொழிவிளக்குனரை சேவைகட்காக ஒழுங்குபடுத்த வேண்டும். மொழிவிளக்குனருக்காக நீங்கள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. உரிமை ஆலோசகர்கள் 46 மொழிகளில் மொழிவிளக்குனரைப் பெறமுடியும்.

மொழிவிளக்குனர் ஓர் இரகசிய காப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். அதாவது அவர்கள் உங்களது உளநல தகவல் உட்பட உங்களது எந்த ஒரு தகவலையும் எவருக்கேனும் கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதே அதன் பொருள். உங்கள் நிலமை பற்றி உங்கள் நண்பர்களிடமோ அல்லது குடும்ப அங்கத்தவர்களிடமோ மொழிவிளக்குனர்கள் பேசக் கூடாது.

## அங்கீகரிப்பு மற்றும் ஆற்றல் சபைக்கு (அஆச) (The Consent and Capacity board - CCB) முன்னான விசாரணை

---

அங்கீகரிப்பு மற்றும் ஆற்றல் சபையானது உளநல சட்ட விதி, பிரதியீட்டு தீர்மானங்கள் விதி, ஆரோக்கிய பராமரிப்பு மற்றும் அங்கீகார விதியைப் போன்ற ஒன்ராறியோவின் உளநல சட்டங்களின் கீழ் விசாரணைகளை நடத்தி தீர்மானங்களை உருவாக்குகின்றது.

உங்கள் வைத்தியரால் அஆச (CCB) இல் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்களை விவாதம் செய்யும் உரிமை உங்களுக்கு உண்டு. உதாரணமாக, நீங்கள்:

- உங்கள் ஆரோக்கிய பராமரிப்பு சிகிச்சையைப் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதவர்
- உங்கள் நிதி நிலமைகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதவர்.
- நீங்கள் விரும்பும்போது வைத்தியசாலையை விட்டு நீங்க முடியாதவர்
- சமூக சிகிச்சை ஒழுங்கினுள் இடப்பட வேண்டியவர்.

என்ற தீர்மானங்களுக்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம்.

உங்கள் விண்ணப்பங்களை அஆச (CCB) பெற்றுக் கொண்ட 7 நாட்களுக்குள் ஓர் விசாரணையைப் பெறும் உரிமை உங்களுக்கு உண்டு. நீங்கள் விளங்கிக் கொள்ளாத மொழியில் அஆச (CCB) இன் விசாரணை நடைபெற்றால் நீங்கள் ஓர் மொழிவிளக்குனரைக் கேட்கலாம். அஆச (CCB) இல் நீங்கள் விண்ணப்பிப்பதற்கு உங்களுக்கு உரிமை ஆலோசகர் உதவும் பொழுது ஓர் மொழிவிளக்குனர் தேவை என்பதை அவன் அல்லது அவள் அஆச (CCB) இற்கு பொதுவாக அறிவிப்பார். அஆச (CCB) இன் நடைமுறை விதிகள் கூறுவது என்னவெனில், உங்களுக்கு ஒரு மொழி விளக்குனர் தேவைப்பட்டால், நீங்கள் அல்லது உங்கள் சட்டத்தரணி அஆச (CCB) இற்கு மிக விரைவாக இதனைக் கூற வேண்டும். அஆச (CCB) ஆனது, ஓர் மொழிவிளக்குனரை ஒழுங்குபடுத்தி தரும். அத்துடன் அதுவே பணக் கொடுப்பனவையும் செய்யும். நீங்கள் மொழிவிளக்குனருக்கு பணக் கொடுப்பனவு செய்யத் தேவையில்லை.

## குற்றவியல் குற்றச்சாட்டு ஒன்று உங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றதா?

நீங்கள் ஓர் **குற்றவியல் நீதிமன்றில்** சட்டத்தரணி இல்லாது இருப்பின், ஓர் **சட்டஆலோசகரிடமிருந்து** உதவி பெறலாம். நீதிமன்ற அறையினுள் ஒரு சட்டத்தரணியைக் கொண்டிராத மக்களுக்கு உதவும் சட்டத்தரணிகளே சட்ட ஆலோசகர்கள் ஆவார். நீங்கள் குற்றமுள்ளவர் என்றோ குற்றமற்றவர் என்றோ வாதாடுவதற்கு உரிய உங்கள் உரிமை பற்றி உங்களுக்கு ஆலோசனை கூறுவதுடன், பிணைக்காக விண்ணப்பிப்பதில் உதவுதல் அல்லது விசாரணை தாமதிக்கப்பட ("ஒத்தி வைக்கப்படல்") வேண்டும் எனக் கேட்பதில் உதவுவார்.

சட்ட ஆலோசகர் பொதுவாக பிரெஞ்சு அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே சேவைகளை வழங்குவார்கள். எனினும், அநேக நீதிமன்றுகளில், அவ்விடங்களிலேயே மொழிவிளக்குனர்கள் இருப்பார்கள். உங்களுக்கு ஓர் மொழிவிளக்குனர் தேவையெனின், உங்களுக்கு உதவி தேவையென்பதை சட்ட ஆலோசகர் அல்லது நீதிமன்ற சேவைகள் உத்தியோகத்தருக்கு அறியச் செய்யுங்கள்.

ஓர் மொழிவிளக்குனரைப் பெற்றுக் கொள்வது உங்கள் உரிமை என்பதை மனதில் கொள்ளுவது முக்கியமானதாகும். *உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பட்டயத்தின்* 14 ஆவது பிரிவு, விசாரணை நடத்தப்படும் மொழியில் பேசமுடியாத எல்லாத் தரப்பினரும் அல்லது சாட்சிகள் அல்லது சட்ட வழக்குகளில் ஈடுபட்டுள்ள காது கேட்கமுடியாத நபர்கள் ஆகியோர் ஓர் மொழிவிளக்குனரின் உதவியைப் பெறும் அரசியல் சாசன உரிமையைக் கொண்டுள்ளனர் என உத்தரவாதப்படுத்துகின்றது. மொழிவிளக்குனர் சேவைகளைக் கேட்பதற்கு உங்களுக்கு உதவும்படி உங்கள் குடும்ப அங்கத்தவர் அல்லது நண்பரை கேட்கலாம். நீங்கள் குற்றவியல் நீதிமன்றில் இருந்தால், மொழிவிளக்குனர் சேவைகள் இலவசமாக வழங்கப்படும்.

## ஒன்ராறியோ மீளாய்வு சபை

ஒன்ராறியோ மீள்பார்வை சபையானது (ஒமீச) (Ontario Review Board –ORB) ஓர் குற்றம் சுமத்தப்பட்டுள்ள உளநல பிரச்சனைகளுள்ள மக்கள் பற்றிய விசாரணைகளையும் தீர்மானங்களையும் மேற்கொள்கின்றது. உங்கள் உளநல பிரச்சனைகளினால், விசாரணைக்கு போக முடியாத ('தகுதியற்ற') அல்லது 'குற்றவியல்ரீதியில் பொறுப்புள்ளவரல்லாதவர்' என உங்களை நீதிமன்று கண்டால், நீங்கள் ஒமீச (ORB) க்குச் செல்ல வேண்டும்.

ஒன்ராறியோ மீள்பார்வை சபையில் மொழிவிளக்குனர் (ORB) சேவைகள் பற்றிய எந்தவித உத்தியோகபூர்வ விதிகளும் இல்லை. உங்கள் வழக்கில் ஈடுபட்டுள்ள யாதாயினும் ஒருவர் ஓர் மொழிவிளக்குனர் தேவையென விதந்துரைத்தால் ஒ.மீ.ச (ORB) ஆனது மொழிவிளக்குனர் சேவைகளை கட்டணமெதுவுமின்றி ஒழுங்குபடுத்தும். உங்களுக்கு மொழிவிளக்குனர் ஒருவர் தேவையெனின் நீங்களோ அல்லது உங்கள் சட்டத்தரணியோ இதனைக் கேட்க வேண்டும்.

## உளநல நீதிமன்றமும் திசைதிருப்பலும்

நீங்கள் ரொறன்ரோவில் கைது செய்யப்பட்டிருந்து உங்களுக்கு உளநல பிரச்சனைகள் இருந்தால், உங்களுக்கு உதவி செய்ய சில சேவைகள் உள்ளன. நீங்கள் நீதிமன்றில் தோன்றும்போது, உளநல பிரச்சனைகளுடனான மக்களுக்கு கிடைக்கக் கூடிய சேவைகளைப் பற்றி உங்கள் சட்டத்தரணி அல்லது சட்ட ஆலோசகரைக் கேளுங்கள்.

உங்களுக்கு உளநல பிரச்சனைகள் இருப்பதுடன் நீங்கள் ஒரு குற்றச்சாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தால், ரொறன்ரோவில் உள்ள **உளநல நீதிமன்றானது** உங்களுக்கு உதவுவதற்காகவென்றே உள்ள நீதிமன்றாகும். பழைய நகர மண்டபத்தில் அமைந்திருக்கும் நீதிமன்றானது, நீங்கள் குற்றம் சாட்டப்பட்ட குற்றம் தொடர்பான பிணை, குற்றம் தொடர்பாக வாதம் செய்தல் மற்றும் உங்களுக்கு சாட்டப்பட்ட குற்றம் தொடர்பாக "குற்றவியல்ரீதியில் பொறுப்பற்றவர்" என்பதைத் தீர்மானித்தல் என்பவற்றைக் கையாளும். இவை **மிக முக்கிய தீர்மானங்களாகும். அத்துடன் என்ன சொல்லப்பட்டது என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளல் மிக முக்கியமானதாகும்.** உங்களுக்கு ஒரு சட்டத்தரணி இல்லாதிருந்தால், நீதிமன்ற அறையில் எப்போதும் சட்ட ஆலோசகர்கள் இருப்பார்கள். நீங்கள் ஒரு மொழிவிளக்குனரை ஒழுங்குபடுத்தும்படி அவர்களைக் கேட்கலாம்.

**உளநல திசைதிருப்பல்** என்பது சிறிய குற்றங்கட்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக இருப்பதுடன் உளநல பிரச்சனைகளையும் கொண்டவர்களாக இருக்கும் மக்களுக்கு உதவுமுகமாக ஏற்படுத்தப்பட்ட வேலைத் திட்டமாகும். பொதுவான குற்றவியல் நீதிமன்றுக்குச் செல்வதற்குப் பதிலாக, நீங்கள் உளநல சேவைகட்குச் செல்வதற்காக சிபார்சு பண்ணப்படலாம். இத் திசைதிருப்பலில், குற்றச் சாட்டுக்கள் வாபஸ் பெறப்படும் அல்லது தள்ளிப் போடப்படுவதுடன் நீங்கள் குற்றவாளி என தீர்க்கப்பட மாட்டீர்கள். மாகாண முடிக்குரிய சட்டத்தரணி உடன்பட வேண்டியிருந்த போதும், உங்கள் சட்டத்தரணி, நீங்கள் ஒரு திசைதிருப்பலை பெறலாமா எனக் கேட்பார். நீங்கள் திசை திருப்பலைப் பெறமுடிந்தால், திசை திருப்பல் ஊழியர், உங்கள் தேவைகளைப் பார்ப்பதற்காக உங்களைச் சந்திப்பதற்கு ஒழுங்கு செய்வார். திசைதிருப்பல் ஊழியர், ஓர் 'திசைதிருப்பல் திட்டத்துடன்' வருவதுடன் உளச்சிகிச்சை அல்லது சமூக உளநல ஆதரவுகள் போன்ற எத்தகைய சேவைகளும் ஆதரவுகளும் உங்களுக்கு தேவை என்பதைப் பற்றிய கருத்துக்களுடனும் வருவார். நீங்கள், உங்கள் குடும்பம், உங்கள் நண்பர் அல்லது உங்கள் சட்டத்தரணி கோரினால், திசைதிருப்பல் ஊழியர்கள் மொழிவிளக்குனர்களை ஒழுங்குபடுத்துவார்கள். திசைதிருப்பல் ஊழியர்களை நீங்கள் சந்திக்க முன்பாக, மொழிவிளக்குனர் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். மொழிவிளக்குதலானது உங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

**உளநல நீதிமன்றா அல்லது உளநல திசைதிருப்பலா உங்களுக்கான சிறந்த தெரிவு என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு சட்டத்தரணி இருந்தால் இவற்றின் நன்மை, தீமை பற்றி அவருடன் பேசுங்கள்.**

## சட்ட உதவியைப் பெறல்

---

ஓர் **சமூக சட்ட சிகிச்சை** நிலையத்திலிருந்து நீங்கள் ஆலோசனையைப் பெறலாம். குறைந்த வருமானமுடைய மக்களுக்கு சமூக சட்ட சிகிச்சைகள் சேவைகளை வழங்குகின்றன. உங்களுக்கு அருகாமையில் உள்ள சமூக சட்ட சிகிச்சையை கண்டறிவதற்காக 416-979-1446 ஐ அழையுங்கள். அத்துடன் யோர்க் பல்கலைக்கழகத்தில் உள்ள சமூக சட்ட உதவி சேவைகள் நிகழ்ச்சித் திட்டமானது (Community Legal Aid Services Program –CLASP) உளநல பிரச்சனைகளுடனான மக்களுக்கு சேவைகளை வழங்குகின்றது. இவர்களை நீங்கள் 416-736-5029 இல் தொடர்பு கொள்ளலாம்.

அங்கீகாரமும் ஆற்றலும் சபை (அஆச) (Consent and Capacity Board – CCB), ஒன்ராறியோ மீள்பார்வை சபை (ஒமீச) (Ontario Review Board –ORB) விசாரணைகள் உள்ளிட்ட அநேக வகையான சட்டப் பிரச்சனைகளுக்காக குறைந்த வருமானமுள்ள மக்களுக்கு **சட்ட உதவி (Legal Aid)** கிடைக்கக் கூடியதாக உள்ளது. ஒமீச (ORB) அல்லது அஆச (CCB) இற்கு முன்னால் உங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒரு சட்டத்தரணியைப் பெறுவதற்கு **ஒரு சட்ட உதவி சான்றிதழுக்காக** நீங்கள் விண்ணப்பிக்க முடியும். சட்ட உதவி தேவைப்படும் ஒவ்வொரு ஒன்ராறியோ நபரும் விண்ணப்பம் செய்யலாம். உங்கள் நிதிநிலமை மற்றும் வழக்கின் வகையைப்

பொறுத்து நீங்கள் சட்ட உதவி சான்றிதழ் பெறுவீர்களா இல்லையா என்பது தங்கியுள்ளது. விண்ணப்பிப்பதற்கு நீங்கள் ஓர் சட்ட உதவி அலுவலகத்திற்கு செல்ல வேண்டும். அல்லது, ஓர் உரிமைகள் ஆலோசகரால் நீங்கள் பார்க்கப்பட்டிருந்தால், அவனோ, அவளோ ஓர் விண்ணப்பத்தை நிரப்ப உங்களுக்கு உதவுவார். நீங்கள் சட்ட உதவி அலுவலகத்திற்குச் செல்லும்போது, உங்கள் வழக்குத் தொடர்பான காகிதங்கள், உங்கள் வருமானம் மற்றும் அடையாளம் காட்டலுக்கான நிரூபணம் போன்ற கூடுமான தகவல்களை சாத்தியமானவரை எடுத்துச் செல்ல வேண்டும். நீங்கள் ரொறன்ரோவில் உள்ள சட்ட உதவி ஒன்ராறியோ அலுவலகத்தை 1-800-668-8258 இல் அழைக்கலாம்.

உங்கள் மொழியைப் பேசும் ஒரு சட்டத்தரணியுடன் பேசுவதை நீங்கள் விரும்பலாம். நீங்கள் தெரிவு செய்யும் மொழியைப் பேசும் சட்டத்தரணியை நீங்கள் கேட்ட போதிலும், உங்களுக்கு அது கிடைக்காமல் போகலாம். ஒமீச (ORB) மற்றும் அஆச (CCB) பற்றிய அதிகளவு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணியை நீங்கள் கேட்கலாம். மொழிவிளக்குனர் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக உங்கள் சட்டத்தரணிக்கு சட்ட உதவியானது கொடுப்பனவு செய்ய வேண்டும். எனினும், மொழிவிளக்குனர்களை ஒழுங்குபடுத்துவது உங்கள் சட்டத்தரணிக்கு கடினமாகலாம்.

நீங்கள் அஆச அல்லது ஒமீச இற்குச் செல்ல முதல் உங்கள் சட்டத்தரணியுடன் நீங்கள் பேசுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் சிறந்த கருத்தாகும். உங்கள் நோக்கில் இருந்து உங்கள் வழக்கை உங்கள் சட்டத்தரணி விளங்கிக் கொள்ளல் முக்கியமானதாகும். ஒரே மொழியை நீங்கள் பேசாவிடில், ஓர் மொழிவிளக்குனரை, ஒழுங்குபடுத்தும்படி உங்கள் சட்டத்தரணியை நீங்கள் கேட்கலாம்.

சட்டத்தரணிகள், நீங்கள் அவர்களுக்குச் சொல்பவை எல்லாவற்றையும் **இரகசியமாக** வைத்திருக்க வேண்டும். உங்கள் அனுமதியில்லாது, உங்கள் வழக்கைப் பற்றி சட்டத்தரணி கலந்துரையாட முடியாது.

## அதிக உதவியைப் பெறல்

---

உரிமைகள் ஆலோசனை மற்றும் உளநலப் பிரச்சனைகள் பற்றிய அதிக தகவல்களுக்கு, நீங்கள் **உளச்சிகிச்சை நோயாளி ஆதரிப்பு அலுவலகத்தை (உநோஆஅ) (Psychiatric Patient Advocate Office – PPAO)** தொடர்பு கொள்ளலாம். அவர்களது தொலைபேசி இலக்கம் (416) –327-7000 அல்லது 1-800-578-2343 ஆகும். **உநோஆஅ** ஆனது, அதன் www.ppao.gov.o.ca எனும் இணையத் தளத்தில் உளநலம் தொடர்பான அநேக தலைப்புகள் பற்றி வழிகாட்டிகளைக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, **"உளச் சிகிச்சை நோயாளி எனும் முறையில் உங்கள் உரிமைகள்"** எனும் தகவல் தாள் பயனுள்ளதாயிருக்கலாம்.

**உளநல சேவைகள் தகவல் ஒன்ராறியோ** ஆனது, உளநல சேவைகள் மற்றும் ஆதரவு பற்றி 1 நாளில் 24 மணித்தியாலங்களும் 1 கிழமையில் 7 நாட்களும் இலவசமான தகவல்களைக் கொடுக்கின்றது. இந்தத் தகவலானது, 140 இற்கு மேற்பட்ட மொழிகளில் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. நீங்கள் உளநல சேவைகள் தகவல் ஒன்ராறியோவை 1-866-531-2600 இல் அழைக்கலாம்.

## ARCH பற்றி

இந்த தகவல்தாள் ஆனது, உளநல பிரச்சனைகளுடனான மக்கள் உள்ளிட்ட திறன்குறைந்த நபர்களின் சமமான உரிமைகளை பாதுகாத்து முன்னேற்றுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட சிறப்பு சட்ட உதவி சிகிச்சை நிலையமான ARCH திறன்குறைந்த தன்மைக்கான சட்ட மையத்தினால் தயாரிக்கப்பட்டது.


425 புளோர் வீதி கிழக்கு, அறை 110

ரொறன்ரோ, ஒன்ராறியோ, M4W 3R5

தொலைபேசி 416-482-8255

கட்டணமற்ற: 1-866-482-2724

TTY: 416-482-1254

கட்டணமற்ற: 1-866-482-2728

தொலைநகல்: 416-482-2981

கட்டணமற்ற: 1-866-881-2723

www.archdisabilitylaw.ca